**மஸ்கெலியா பிரதேச சபை - 2024**

-----------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மஸ்கெலியா பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மஸ்கெலியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 02 அபிவிருத்தி திட்டங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 3,299,457 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அறிவித்தல் பதாதைக் கட்டண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் நிலுவை ரூபா 1,704,525 ஆக இருந்த போதும் ஐந்தொகையில் ரூபா 1,245,575 vd ரூபா 454,950 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு தளபாட உபகரணங்கள் ரூபா 199,791 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **பாராளுமன்ற சட்டம்** | | | |
| **(i)** | 2021 ஜூலை 08 திகதிய 2235/54 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப் பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை | 2018 – 2023 காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 61 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | குடியிருப்பிற்காக பயன்படுத்துகின்ற கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ்களை வழங்க வேண்டும். |
| **(ii)** | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| **(a)** | 24 (1) (அ), (ஆ) ஆம் பிரிவு | அரச வர்த்தமானியில் வெளியிடாமல் 26 வீதிகள் வீதிப் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சபைக்குச் சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கை வேண்டும். |
| **(b)** | 47 மற்றும் 52 ஆம் பிரிவுகள் | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் இனங் காணப்பட்டிருந்த 10 அத்துமீறி நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்து மீறிய நிர்மாணங்களை இடை நிறுத்துமாறும் அத்துமீறிய நிர்மாணங்களை சட்டரீதியாக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| **(iii)** | 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் (நிறைவேற்றப்பட்ட உப உறுப்பு) சட்டத்தின் 39.1 மற்றும் 39.2 ஆம் பிரிவுகள் | 2023 ஆம் ஆண்டில் 23 விளம்பர பதாதைகளின் 2904.5 சதுர அடிகளுக்காக ரூபா 412,500 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எரிய நிறுவனங்களுக்கு நினைவூட்டல் உரிய நிறுவனங்களுக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானம் அளவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(iv)** | 2006 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட) ஏற்பாடுகள் சட்டம் | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்ட முத்திரை கட்டணங்களை அனுப்பாமல் ரூபா 355,310 தொகை வைப்புக் கணக்கில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | முத்திரை கட்டணங்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நி.பி 104(4) | மீளாய்வாண்டில் உழவு இயந்திரம் ஒன்று விபத்துக்கு உட்பட்டு ரூபா 97,925 செலவிடப்பட்டு திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்பான நபர்களை இனங் கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | பரிசோதனை அறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு பொறுப்பான தரப்பினரை இனங் கண்டு பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி. 571(3) | 2019 – 2023 காலப் பகுதிக்குரிய காலாவதியான ரூபா 1,233,700 ஆன 43 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | 2016 மார்ச் 17 ஆந் திகதிய மமா/உ.ம.ஆ/ 2016/3 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் முன்னைய ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடை வாடகை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 09 கடைகளின் கடை வாடகை தொடர்பாக உடன்படிக்கை கள் திருத்தம் செய்யப் பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் புதிய கடை வாடகை உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,274,503 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,776,653 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,055,000 | 3,650,518 | 3,545,788 | 1,264,950 | 4,513,140 | 4,243,926 | 4,066,350 | 1,160,220 |
| (ii) | வாடகை | 12,025,200 | 11,491,355 | 12,896,897 | 5,912,468 | 9,139,000 | 7,502,729 | 6,761,119 | 7,318,010 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,300,000 | 1,845,049 | 1,845,049 | - | 1,261,000 | 1,719,098 | 1,719,098 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 16,757,800 | 15,961,711 | 10,359,052 | 26,612,786 | 15,268,400 | 9,900,646 | 12,379,294 | 21,010,127 |
| | | 35,138,000 | 32,948,633 | 28,646,786 | 33,790,204 | 30,181,540 | 23,366,399 | 24,925,861 | 29,488,357 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

#### (அ) வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,227,183 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் அலகொன்று ரூபா 5,000 ஐ மிகைத்த 58 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 525,305 ஆன நிலுவை வீதவரி மீதியை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

#### (ஆ) இறைச்சிக் கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிலுவையாக இருந்த ரூபா 4,968,373 ஆன இறைச்சிக் கடை கேள்வி கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை | எதிர்வரும் காலங்களில் நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,182,731 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 23,097,500 ஆக இருந்தது. | எதிர்வரும் காலங்களில் நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**பொதுமக்கள் சுகாதாரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 02 நீர் செயற்திட்டங்களின் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட நீர் மாதிரி பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் விநியோகிக்கப்படும் குடிநீரின் தரம் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதும் அதனை சுத்திகரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | பொது மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும். |

**3.2 வெளிப்படையான மோசடிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்துகின்ற டபள் கெப் வண்டியின் பதிவு சான்றிதழில் குறிப்பிடப்பட்ட எஞ்சின் இலக்கம் 4D56JM7440 என இருந்த போதும் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் .வாகனத்தின் என்ஜின் இலக்கம் 4D56CA8896 ஆக இருந்ததால் முறைகேடு கொண்ட இடம்பெற்றுள்ளதாக அவர் அளிக்கப்பட்டது. | அம்பகமுவ பிரதேச சபையிடம் விசாரித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | இது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை பயன்படுத்தும் 35 காணிகளின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சொத்துக்களின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை செயலாளர், நூலகர், முன்பள்ளி ஆசிரியர், வேலை/களப் பரிசோதகர், மின் தொழில்நுட்பவியலாளர், மருந்து தயாரிப்பவர், காவலாளி, நூலக உதவியாளர், நீர் தொழிலாளி, அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழில்நுட்ப உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், வருமானப் பரிசோதகர், சாரதி, அலுவலக உதவியாளர், வேலை வெளிக்கள தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உட்பட 17 பதவிகளில் 65 வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தினால் சபையில் செயல்பாடுகளை செயற்திறனாக நிறைவேற்றும் இயலுமை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | வெற்றிடங்களை பூரணப்படுத்தி பொதுமக்கள் சேவைகளை செயற்திறனாக நடாத்திச் செல்லல் வேண்டும். |